# தூத்துக்குடி மாநகராட்சி

## சாதாரண கூட்டப் பொருள்

2023ம் ஆண்டு ஜீலை மாதம் 27ம் நாள் வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3(1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| மாமன்ற கூட்ட தேதி | மாமன்ற தீர்மானம் | தீர்மானம் |
|---|---|---|
| 27.07.2023 | 1) தூத்துக்குடி மாநகராட்சி கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களின் வாசிப்பு திறனை ஊக்குவிக்கவும், கற்றல் திறனை மேம்படுத்திடவும், நாட்டின் தற்போதைய நிகழ்வுகளை அன்றாடம் அறிந்திடவும், சமூக உணர்வினை வளர்த்திடவும் மேலும் கற்றலை இனிமையாக்கி, பொதுத்தேர்வுகளுக்கு தயாராவது, போட்டித்தேர்வுக்கு தயார் செய்வது, மாதிரி வினா விடைகள் வழங்குவது, அரசுத்தேர்வுகளுக்கு மாணவ, மாணவியர்களை தயார் செய்திட ஏதுவாக, தினசரி நாளிதழ் மூலம் வாசிப்பு பழக்கத்தினை, மாநகராட்சி பள்ளியில் கல்வி பயிலும் மாணவ, மாணவர்களுக்கிடையே ஏற்படுத்த வேண்டியது இன்றியமையாத பணியாகும். எனவே தூத்துக்குடி மாநகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்காணும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் நலனை கருத்தில் கொண்டு தினகரன் நாளிதழ் விநியோகம் செய்திட ஏதுவாக கீழ்க்காணும் மாநகராட்சி பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. | 344) அலுவலகக் குறிப்பு<br>1.அனுமதிக்கப் பட்டது<br>2.அங்கீகரிக்கப் பட்டது |

| S. NO | NAME OF THE SCHOOL | GRADE | TOTAL STRENGTH | No.of.Newspaper to be supplied /per day |
|---|---|---|---|---|
| 1. | Samuvelpuram Primary school | Primary only with grades 1 to 5 | 574 | 1 |
| 2. | Samuvel Puram Higher secondary school | Higher Secondary with grades 6 to 12 | 685 | 7 |
| 3. | South New street Middle school | Upper Primary with grades 1 to 8 | 206 | 2 |
| 4. | SE.VA. Elementary School | Primary only with grades 1 to 5 | 151 | 1 |
| 5. | Thermal Nagar Middle School | Upper Primary with grades 1 to 8 | 58 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | Bharathi Nagar Middle School | Upper Primary with grades 1 to 8 | 159 | 2 |
| 7. | J.S Nagar Elementary School | Primary only with grades 1 to 5 | 47 | 1 |
| 8. | Veeranayanakkanthattu Elementary School | Primary only with grades 1 to 5 | 35 | 1 |
| 9. | Melur Middle school | Upper Primary with grades 1 to 8 | 565 | 5 |
| 10. | Mudukku Kadu Elementary School | Primary only with grades 1 to 5 | 25 | 1 |
| 11. | Levinjipuram Elementary School | Primary only with grades 1 to 5 | 80 | 1 |
| 12. | Shanmugapuram Middle School | Upper Primary with grades 1 to 8 | 152 | 2 |
| 13. | Devar colony Middle school | Upper Primary with grades 1 to 8 | 151 | 2 |
| 14. | Ginfactory Road Middle School | Upper Primary with grades 1 to 8 | 333 | 3 |
| 15. | Sivanthankulam Middle School | Upper Primary with grades 1 to 8 | 771 | 7 |
| 16 | M.THANGAMMALPURAM Elementary School | Primary only with grades 1 to 5 | 157 | 1 |
| 17. | Toovipuram Elementary School | Primary only with grades 1 to 5 | 281 | 1 |
| 18. | Vadakku Badrakali amman Middle school | Upper Primary with grades 1 to 8 | 138 | 2 |
| 19. | Ayyasamy Colony Middle School | Upper Primary with grades 1 to 8 | 151 | 2 |
| 20. | Athimarapatti Middle School | Upper Primary with grades 6 to 8 | 11 | 1 |
| Total of No.of Newspapers to be supplied per day | | | | 44 |

எனவே, மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள மாநகராட்சி பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவர்களின் நலன் கருதி, மேற்படி பள்ளிகளின் அனைத்து வேலை நாட்களிலும் , ஒரு நாளிதழ் பிரதியின் விலை ரூ.4 என்ற சலுகை விலைவிகிதத்தில், நாள் ஒன்றுக்கு 44 தினகரன் நாளிதழ் பிரதிகள் வீதம் 15.06.2023 முதல் 30.04.2024 தேதி வரை, (வார விடுமுறை, பண்டிகை விடுப்பு நாட்கள், பருவகால தேர்வு விடுமுறை நீங்கலாக) 216 நாட்களுக்கு மேற்படி மாநகராட்சி பள்ளிகளுக்கு தினகரன் நாளிதழினை விநியோகம் செய்திடவும் அதற்கான உத்தேச செலவினம்(216 X 44 X 4 = 38,016/–) ரூ38,016/– ஐ மாநகராட்சியின் கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மாமன்றம் அனுமதிக்கலாம்

| | | |
|---|---|---|
| | 2. அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று, நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>இ4/0313/2023 | |
| | 2) இம்மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டுகளில் தெருவிளக்கு மற்றும் கோபுர மின்விளக்குகளாக 18226 எண்ணம் LED விளக்குகள் மாநகராட்சி பராமரிப்பில் உள்ளது. இதில் 15130 தெருவிளக்குகள் சீர்மிகு திட்டத்தின் கீழ் LED விளக்குகளாக மாற்றப்பட்டது. இதற்கு Replacement Warranty 5 வருடங்களாகும். இதில் இரண்டு வருடம் முடிவுற்றும் 3 வருடம் Warranty உள்ளது. மீதம் உள்ள 3090 விளக்குகளில் பல்வேறு திட்டத்தின் கீழ் 2486 LED விளக்குகள் மாற்றப்பட்டு அதற்கு Warranty காலம் 2 ஆண்டுகள் உள்ளது. மீதம் உள்ள 610 LED விளக்குகளுக்கு Warranty period முடிவுற்றது. மாநகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வொப்பந்த காலம் முடியும் தருவாயில் உள்ளது.<br>எனவே, நகராட்சி நிர்வாக இயக்குனரகத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டு தெருவிளக்குகள் LED ஆக மாற்றம் செய்வதுடன் அதனை தனியார் மூலம் இயக்கி பராமரிப்பதற்கான ஒப்பந்தகாலம் 10 ஆண்டுகள் எனவும், அதற்கு ஆண்டு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் Warranty period உள்ள காலத்திற்கு Labour Charge எனவும் Warranty Period முடிவுற்ற காலத்திற்கு Labour Charge மற்றும் Material Cost என கட்டணம் நிர்ணயம் செய்யப்படுகிறது. அதில் முதல் 2 ஆண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் நிர்ணயம் செய்யும் தொகையில் வழங்கவும், 3வது ஆண்டு முதல் ஏற்கனவே நிர்ணயம் செய்து வழங்கப்பட்ட தொகையில் ஒவ்வொரு ஆண்டும் 5% உயர்வு செய்து அதற்கு மாமன்றம் அனுமதி பெற்று வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன்பேரில் இம்மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டுகளில் உள்ள | 345) அலுவலகக் குறிப்பு 1,2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **18226** LED விளக்குகள் பொருத்தப்பட்டு, தெருவிளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளில் ஒப்பந்த காலம் முடிவடைய உள்ளதால் அப்பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கு **2022–23**ம் ஆண்டு நகராட்சி நிர்வாக இயக்குனரகம் மூலம் அனுமதிக்கப்பட்ட விலைவிகித அடிப்படையில் ஆண்டுக்கு தெருவிளக்கு இயக்கி பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 99.00 லட்சத்தில் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவின தொகையை மாநகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு:<br>1. நகராட்சி நிர்வாகஅலுவலகம் மூலம் நிர்ணயம் செய்யப்பட்ட விலை விகிதத்தில் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**99.00** லட்சம் (வருடத்திற்கு) அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அச்செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து கோரவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மாநகராட்சி பராமரிப்பில் **3** மற்றும் **2** ஆண்டுகள் Warranty period உள்ள **17616** LED தெரு விளக்குகளுக்கு Labour Charge அடிப்படையிலும் Warranty Period இல்லாத **610** தெரு விளக்குகளுக்கு Labour Charge மற்றும் Material Cost அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மாநகராட்சி பராமரிப்பில் உள்ள **18226** LED தெருவிளக்குகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள **10** ஆண்டு தொகுப்புகளாகவும் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் நிர்ணயம் செய்யப்படும் தொகையின் மூன்றாம் ஆண்டு முதல் வருடா வருடம் முந்தைய ஆண்டு தொகையில் 5% உயர்வு செய்து ஒவ்வொரு ஆண்டும் அதற்கு மாமன்றம் அனுமதி பெற்று தெருவிளக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம் | |

| | | |
|---|---|---|
| | இ3/3196/2023 | |
| | 3) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொதுநிதி திட்டம் 2022–23 கீழ் Operation and maintenance of LED street light including Routine break down maintenance work in 60wards of Thoothukudi Town for the period of three months பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு M/s. Sudha Engineering, Thoothukudi – நிறுவனத்தாருக்கு 18.11.2022 முதல் 30.05.2023 வரையிலான காலங்களுக்கு பணி மேற்கொள்ள 31.05.2023ம் தேதிய 322ஆம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டதன்பேரில் பணி உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேலும் 3 மாத காலத்திற்கு அதாவது 01.06.2023 முதல் 31.08.2023 வரை பணிகள் மேற்கொள்ளவும், அதனை தொடர்ந்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும், மேலும் தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், M/s. Sudha Engineering, என்பவருக்கு 31.08.2023 வரை தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் காலத்தினை நீட்டித்து மேற்காள்ள முன்அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>எனவே M/s. Sudha Engineering, என்பவருக்கு 01.06.2023 முதல் 31.08.2023 வரை தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நீட்டிப்பு செய்ததற்கும், அதற்கு இம்மாமன்ற தீர்மான எண் 322 நாள் 31.05.2023 ன் படி மாதம் 1க்கு ரூ.6,37,555.45/– (GST நீங்கலாக) வீதம் பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டுகளில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு 01.06.2023 முதல் 31.08.2023 வரை M/s. Sudha Engineering, நிறுவனத்தினருக்கு மாண்புமிகு மேயர் அவர்கள் முன் அனுமதி பெற்று நீட்டிப்பு செய்ததை மாமன்றம் ஏற்கலாம்.<br>2. தெருவிளக்கு பராமரிப்பு பணியினை நீட்டிப்பு செய்த காலத்திற்கு மாதம் 1க்கு ரூ.6,37,555.45/– வீதம் (GST நீங்கலாக) பணி நீட்டிப்பு காலமான 01.06.2023 முதல் 31.08.2023 வரை உள்ள காலத்திற்கான செலவின தொகையை பொது நிதியில் செலவு செய்ய | 346) அலுவலகக் குறிப்பு<br>1.ஏற்றுக் கொள்ளப்பட்டது<br>2.அனுமதிக்கப் பட்டது |

மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ3/2338/2022

4) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 7 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. இதனை 37 பகுதிகளாக (sector) பிரிக்கப்பட்டு சுகாதார பணிகள் நடைபெற்று வருகிறது. மாநகராட்சியில் அனுமதிக்கப்பட்ட 40 நகர சுகாதார செவிலியர் பணியிடத்தில் தற்போது 13 நகர சுகாதார செவிலியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். காலிபணியிடம் 27 எண்ணிக்கை ஆகும். தேசிய சுகாதார சங்கம் மூலம் 15 நகர சுகாதார செவிலியர் பணிபுரிந்து வருகிறார்கள். இதனால் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிச்சுமை அதிகமாக உள்ளது. எனவே, காலியாக உள்ள 12 நகர சுகாதார செவிலியர் பணியிடங்களில் தற்போது நகர்புற வாழ்வாதார மையம் மூலம் 8 நகர சுகாதார செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டு மாநகராட்சி பொதுநிதியிலிருந்து ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போது காலியாக உள்ள 4 நகர சுகாதார செவிலியர் பணியிடங்களை நகர்புற வாழ்வாதார மையம் மூலம் தற்காலிகமாக பணியமர்த்துவதற்கும் பொதுநிதியிலிருந்து ஊதியம் வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பதவி | எண்ணிக்கை | ஊதியம் | மாதம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | நகர சுகாதார செவிலியர் | 4 | 11000/- | 9 | 3,96,000/- |

மேற்படி பட்டியலில் உள்ள 4 நகர சுகாதார செவிலியர்களை 01.07.2023 முதல் 31.03.2024 வரையிலான காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்திக் கொள்வதற்கும் அவர்களுக்கான ஊதியம் தொகை ரூ. 4.00 இலட்சம் நகர்புற வாழ்வாதார மையம் மூலம் பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

நகர்புற வாழ்வாதார மையம் மூலம் 4 நகர சுகாதார செவிலியர்களை 01.07.2023 முதல் 31.03.2024 வரையிலான 9மாத காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்திக் கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்

எச்1/1242/2023

347) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது

5) உள்ளாட்சிகளில் பணிபுரியும் அலுவலர்கள், உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் அனைவருக்கும் பணிகள் குறித்த அடிப்படை பயிற்சி மற்றும் அரசு அவ்வபோது அறிவிக்கும் புத்தாக்க பயிற்சி ஆகியன இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்,கோவை அவர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்திற்கு ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளும் வருடாந்திர பங்களிப்பு தொகை ரூ.3.00 இலட்சம் செலுத்த நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (எம்.இ1) துறை அரசாணை

348) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது

| | | |
|---|---|---|
| | (எம்எஸ்).எண்.36, நாள்.19/04/2021.இல் ஆணையிட்டுள்ளது.<br>அதன்பேரில் இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களின் கடிதம் எண். 399/2023/அ2, நாள்.06.07.2023ல், 2023–24 ஆம் ஆண்டிற்கு உள்ளாட்சிகளின் மூலம் செலுத்தப்படும் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கான பங்குதொகை ரு.3.00 இலட்சம் செலுத்த கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.<br>எனவே இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை நிறுவனத்திற்கு 2023–24ஆம் ஆண்டிற்கான தூத்துக்குடி மாநகராட்சியின் பங்கு தொகை ரூ.3.00 இலட்சம் செலுத்திடவும், அதற்கான செலவினத்தினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்<br>சி1 / 3293 / 2023 | |
| | 6) தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றத்தின் 30.06.2023ம் தேதிய 331 ஆம் எண் தீர்மானத்தில், சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் இம்மாநகராட்சிக்குட்பட்ட 9 நவீன பேருந்து நிறுத்த நிழற்கூரைகளில் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள LED திரையில் விளம்பரம் செய்யும் குத்தகை உரிமத்திற்கு (உரிமம் ஒப்படைக்கும் நாள்முதல் மூன்றாண்டு காலத்திற்கு) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து 22.06.2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட நிலையில் மேற்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் எந்தநபரும் கலந்து கொள்ள முன்வராததைத் தொடர்ந்து, மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 18.07.2023 அன்று நடைபெறும் என தெரிவித்து தினமலர் நாளிதழில் 12.07.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.<br><br>அதன்பேரில் 18.07.2023 (செவ்வாய்க்கிழமை) அன்று மாலை 2 மணி முதல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏலம் கோர எந்த நபரும் விண்ணப்பிக்காத நிலையில் 19.07.2023 அன்று காலை 11.30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிதாரார்கள் முன்னிலையில் வரப்பெற்ற மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விண்ணப்ப உறைகள் ஆணையர் அவர்களால் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ளது.<br><br>இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் 9 நவீன பேருந்து நிறுத்த நிழற்கூரைகளில் அமைக்கப்பட்டுள்ள LED திரையில் விளம்பரம் செய்யும் குத்தகை உரிமம் | 349) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| வ.எண் | காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஆரம்ப ஏலம்/ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திருமதி. ந. சங்கீதா, 4/291/10–C, நேதாஜி நகர், முத்தம்மாள் காலனி, தூத்துக்குடி–628008 | ரூ.4,00,000/– | ரூ.4,00,250/– |
| 2. | பா.சண்முக சுந்தரம், 46/46, செல்வ விநாயகபுரம் 2வது தெரு, தூத்துக்குடி–628002 | | ரூ.4,00,150/– |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.ந.சங்கீதா என்பவரால் கோரப்பட்டுள்ள ரூ.4,00,250/–ம் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஆரம்ப ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகையை காட்டிலும் கூடுதல் ஆகும். எனவே குத்தகை உரிமம் வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதியளிக்கலாம்.

அ16/1936/2022

7) தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர் **M/s.VICTORIA CONTRACTOR** என்பவர் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு முன் வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டுள்ளார்கள்.

| SL. NO | NAME OF WORK | ESTIMATE NO | PAYMENT DATE | AMOUNT EMD |
|---|---|---|---|---|
| 1. | Engaging of Workers for Thoothukudi Corporation Soild Waste Management Service | H1/2275/2017 | 22.03.2018 | 2,78,000/- |

350) அலுவலகக் குறிப்பின்படி வைப்புத் தொகை திரும்ப வழங்க அனுமதிக்கப் பட்டது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | Comprising of door to door Collecton of MSW, Road/ Street Sweeping drain cleaning and storage of Waste at Designated Collection Points on Contract Basis for a period of One Year Package II West Zone | | | |
| | | TOTAL AMOUNT | | **2,78,000/-** | |

மேற்படி பட்டியலில் கலந்து கொண்டுள்ள பணிக்கு மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் காரணமாக அன்னாருக்கு பணி ஒதுக்கிடு செய்யப்படவில்லை மேலும் அன்னார் செலுத்திய முன்வைப்பு தொகை மூன்று வருடத்திற்குள் திரும்ப பெறாததால் அத்தொகை காலங்கடந்த வைப்பு தொகைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில் M/s.VICTORIA CONTRACTOR என்பவர் மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு செலுத்திய முன் வைப்பு தொகையை திரும்ப வழங்க கேட்டு விண்ணப்பித்துள்ளார், அன்னார் செலுத்திய மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணிக்கு செலுத்திய முன் வைப்பு தொகை ரூ.**2,78,000/-**காலங்கடந்த வைப்பு தொகையாக உள்ளதால் அன்னாருக்கு திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

M/s.VICTORIA CONTRACTOR ஒப்பந்ததாரர் என்பவர் பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு முன் வைப்பு தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டுள்ளதில் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. எனவே தொழில்நுட்ப பிரிவு அறிக்கையை ஏற்று காலங்கடந்த வைப்பு தொகை கணக்கில் கொண்டு செல்லப்பட்ட வைப்பு தொகை ரூ.**2,78,000/-**திரும்ப வழங்கலாம்.

பி3/1828/2023

8) தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர் **M/s.VICTORIA CONTRACTOR** என்பவர் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு முன் வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டுள்ளார்கள்.

| SL. NO | NAME OF WORK | ESTIMATE NO | PAYMENT DATE | AMOUNT EMD |
|---|---|---|---|---|
| 1. | Engaging of Workers for Thoothukudi Corporation Soild Waste Management Service Comprising of door to door | H1/2275/2017 | 19.06.2018 | 2,78,000/- |

351) அலுவலகக் குறிப்பின்படி வைப்புத் தொகை திரும்ப வழங்க அனுமதிக்கப் பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| | Collecton of MSW, Road/ Street Sweeping drain cleaning and storage of Waste at Designated Collection Points on Contract Basis for a period of One Year Package II West Zone | | | |
| | TOTAL AMOUNT | | | **2,78,000/-** |

மேற்படி பட்டியலில் கலந்து கொண்டுள்ள பணிக்கு M/s.S.K.SELVI என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதால் **M/s.VICTORIA CONTRACTOR** ஒப்பந்ததாருக்கு பணி ஒதுக்கீடு செய்யப்படவில்லை மேலும் அன்னார் செலுத்திய முன்வைப்பு தொகை மூன்று வருடத்திற்குள் திரும்ப பெறாததால் அத்தொகை காலங்கடந்த வைப்பு தொகைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில் M/s.VICTORIA CONTRACTOR என்பவர் மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு செலுத்திய முன் வைப்பு தொகையை திரும்ப வழங்க கேட்டு விண்ணப்பித்துள்ளார், அன்னார் செலுத்திய மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணிக்கு செலுத்திய முன் வைப்பு தொகை ரூ.**2,78,000/-**காலங்கடந்த வைப்பு தொகையாக உள்ளதால் அன்னாருக்கு திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

M/s.VICTORIA CONTRACTOR ஒப்பந்ததாரர் என்பவர் பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு முன் வைப்பு தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டுள்ளதில் M/s.S.K.SELVI என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதால் என தொழில்நுட்ப பிரிவு அறிக்கையை ஏற்று காலங்கடந்த வைப்பு தொகை கணக்கில் கொண்டு செல்லப்பட்ட வைப்பு தொகை ரூ.**2,78,000/-**திரும்ப வழங்கலாம்.

பி3/1829/2023.

---

**9)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் **21191/2022/CFC–1**, நாள் **23.06.2023**ன் படி தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்த சாலைகளை மேம்படுத்தும் வகையில் **15**வது மத்திய நிதிக்குழு மான்யம் **2023–2024** திட்டத்தின் (Untied Grant) கீழ் ரூ.**6.39** கோடி நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிகளுக்கு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை ந.க.எண் இ**1/1532/2023**, நாள் **28.06.2023**ன் படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது.

மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்

**352)** அலுவலகக் குறிப்பின்படி பதிவு செய்யப் பட்டது

| | | |
|---|---|---|
| | இ1/1532/2023 | |
| | 10) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்த சாலைகளை மேம்படுத்தும் வகையில் 6 வது மாநில நிதிக்குழு நிதியின் ஊக்க தொகை , செயலற்ற கணக்குகள் மற்றும் வட்டி நிதி (2023–2024) கீழ் ரூ.8.78 கோடி மதிப்பீட்டில் 11.76 கி.மீ நீளத்தில் சாலைகள் அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் 20499/2023/SS3, நாள் 21.06.2023ன் படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது.<br>மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்<br>இ1/2947/2023 | 353) அலுவலகக் குறிப்பின்படி பதிவு செய்யப் பட்டது |
| | 11) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 22038/2023/SS–2, நாள் 28.06.2023ன் படி தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்த சாலைகளை மேம்படுத்தும் வகையில் 6வது மாநில நிதிக்குழு மான்யம் 2023–2024 திட்டத்தின் (SFC Arrear 2023-2024) கீழ் ரூ.7.34 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிகளுக்கு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை ந.க.எண் இ1/2309/2023, நாள் 28.06.2023ன் படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது.<br>மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்<br>இ1/2309/2023 | 354) அலுவலகக் குறிப்பின்படி பதிவு செய்யப் பட்டது |
| | 12) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 22039/2023/SS–2, நாள் 28.06.2023ன் படி தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்த சாலைகளை மேம்படுத்தும் வகையில் 6வது மாநில நிதிக்குழு மான்யம் 2023–2024 திட்டத்தின் (SFC Diff between 5th and 6th SFC 2023-2024) கீழ் ரூ.3.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிகளுக்கு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை ந.க.எண் இ1/2309/2023, நாள் 28.06.2023ன் படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது.<br>மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்<br>இ1/2309/2023 | 355) அலுவலகக் குறிப்பின்படி பதிவு செய்யப் பட்டது |
| | 13) தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட ஜெயராஜ் ரோடு வணிக வளாகம் முழுவதும் இடிக்கப்பட்டு சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் | 356) அலுவலகக் குறிப்பு 1.அனுமதிக்கப் |

<table>
<tr>
<td></td>
<td>10.24 கோடியில் பலஅடுக்கு வாகன நிறுத்தும் இடம் மற்றும் 16 கடைகள் கொண்ட வணிக வளாகம் புதியதாக கட்டப்பட்டு 26.05.2023 அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது. தற்போது மேற்படி பல அடுக்கு வாகனம் நிறுத்தும் இடத்தில் வாகனங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் நுழைவு கட்டணம் வசூலித்தல் போன்ற பணிகளை கவனிக்கும் வகைக்கு கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணியாளர்களின் விபரம்</th><th>பணியாளர்க ளின் எண்ணிக்கை</th><th>பணிநேரம் (சுழற்சி முறையில்)</th></tr>
<tr><td>1.</td><td>காவலர்கள்</td><td>2</td><td>12 மணி நேரம்</td></tr>
<tr><td>2.</td><td>கணினி ஆப்ரேட்டர்கள்</td><td>5</td><td>8 மணி நேரம்</td></tr>
<tr><td>3.</td><td>வாகனங்களை ஒழுங்குபடுத்தும் பணியாளர்கள்</td><td>5</td><td>8 மணி நேரம்</td></tr>
</table>
தற்போது முதற்கட்டமாக கணினி ஆப்ரேட்டர் நிலையில் 5 நபர்கள் கட்டண வசூல் பணியில் 12.06.2023 முதல் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் மேற்படி பணியின் அவசர அவசியம் மற்றும் முக்கியத்துவம் கருதி எதிர்வரும் காலத்தில் மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணியிடங்களுக்கு தேவையான நபர்களை நியமிக்கவும் அதற்கான மாதாந்திர ஊதிய செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலக குறிப்பு:<br>
1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>
2. மேற்படிபணியிடங்களுக்கான ஊதியம் வழங்குவதற்கான செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
3. அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.</td>
<td>பட்டது<br>2. அனுமதிக்கப் பட்டது<br>3.அங்கீகரிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>14) தூத்துக்குடி மாநகராட்சி தற்பொழுது 90.66 சதுர கி.மீ பரப்பளவில் 60 வார்டுகளை உள்ளடக்கியது ஆகும். இம்மாநகராட்சியில் 2011ம் ஆண்டு கணக்குப்படி மக்கள்தொகை 3,72,408 ஆகும். தற்போது மாநகராட்சி பகுதிக்கு வெவ்வேறு திட்டங்களின் மூலம் தற்பொழுது 66.20 MLD குடிநீர் வல்ல நாடு தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து பம்பிங் செய்ப்பட்டு 30 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தூத்துக்குடி மாநகர பகுதி</td>
<td>357)<br>அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மக்களுக்கு சுமார் 600 கி.மீ பைப்லைன் குழாய்கள் மூலம் தண்ணிர் விநியோகம் செய்யப்படுகிறது.<br>தற்போது மாநகராட்சியில் அடிக்கடி ஏற்படும் தண்ணீர் குழாய்கள் உடைப்பு, தண்ணீர் கசிதல், சரியான முறையில் தண்ணீரை மக்களுக்கு பகிர்ந்து அளித்தல் ஆகிய பணிகளை செய்ய மாநகராட்சியில் நிரந்தர குழாய் ஆய்வாளர்கள் (TAP INSPECTOR) 6 நபர்கள் உள்ளனர். மாநகராட்சியின் மூலமாக மக்களுக்கு சீரிய முறையில் குடிநீர் விநியோகம் செய்ய பொருத்துநர்கள் (Fitter) 4 நபர்கள் மாநகராட்சியில் CLC மூலம் தற்காலிக அடிப்படையில் 2023–2024ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி பொருத்துநர்கள்(Fitter)ரூ.586 வீதம் வழங்குவதற்கும் 01.08.2023 முதல் 8 மாத காலத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அதற்கான உத்தேச செலவினத் தொகை ஆண்டிற்கு ரூ.6.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : இம்மாநகராட்சியில் நகர்புற வாழ்வாதார மையம்(CLC) மூலம் சீரிய முறையில் குடிநீர் விநியோகம் செய்ய பொருத்துநர்கள் (Fitter) 4 நபர்கள் 2023–2024ம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி பொருத்துநர்கள்(Fitter) ரூ586 வீதம் வழங்குவதற்கும் 01.08.2023 முதல் 8மாத காலத்திற்கு பணியில் ஈடுபடுத்திக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ஆண்டிற்கு ரூ.6.00 இலட்சத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ5/2396/2019 | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்:27.07.2023

மேயர்
தூத்துக்குடி மாநகராட்சி